# शैवागमेषु लोकाचारोक्तिः

Dr.C.VENKATESAN
Assistant Professor in Sanskrit,
P.G. and Research Department,
Rajah's College Sanskrit and Tamil Studies,
Tiruvaiyaru – 613 204.

முன்னுரை:

சைவாகமங்கள் சிவபெருமானால் பார்வதி அம்மையாருக்கு உபதேசிக்கப்பட்டு இன்று வரை பல ஆலயங்களில் பூஜை முறையில் அனுஷ்டிக்கப் பட்டு வருகிறது.

பெரும்பாலும் அனைவரின் கருத்து இவ்வாறு இருக்கிறது कर्षणादि प्रतिष्ठान्तम् அதாவது பூமிசோதனை தொடங்கி குடமுழுக்கு பர்யந்தம் மட்டுமே ஆகம வாக்கியங்கள் உபதேசிக்கிறார் உபதேச கர்தா என்று – ஆனால் அவ்வாறு கிடையாது.

சைவாகமங்களில் ஆலய பூஜை முறைகள் தவிர நம் அன்றாட தேவைக்கேற்ப – ஒரு சாதாரண மனிதன் காலை எழுவது முதல் இரவு துயில்வது வரை. பல நெறியுடன் கூடிய உபதேசங்கள் உபதேசிக்கப் பட்டு நடைமுறையில் காணப்படுகிறது.
அவற்றில் சில முக்கிய உபதேசங்களை பதிவு செய்ய முயல்கிறேன்..

சைவாகமங்கள் மொத்தம் 28, உபாகமங்கள் 207. ஆகமத்திற்கு தந்த்ரம் என்று ஒரு முக்கிய பெயர்.

தந்த்ரம் எனும் சொல் விளக்கம்

तनोति विपुलानर्थान् तन्त्रमन्त्र समाश्रितान्।
त्राणं च कुरुते पुंसां तेन तन्त्रमिति स्मृतम्॥ सुप्रभेदागमः

தந்த்ரம் என பெயர் வரக்காரணம் யாதெனில் அறிவு ஆற்றல் வடிவான மந்திரம் செயல் முறைகளுடன் கூடிய மிக விரிவான அர்த்தங்களை பரப்புவதாலும், உயிர்களை வாழ்கை துயரக் கடலிலிருந்து காப்பாற்றுவதாலும் தந்தரம் என்ற பெயரில் ஆகமங்கள் அழைக்கப்படுக்கின்றன.

போகமோக்ஷம் அளிப்பது ஶிவாகமம்

चतुष्पादयुतः तन्त्रं भुक्तिमुक्त्यर्थकारणम्।
सारात् सारमिदं तन्त्रं सुप्रभेदं विनायक॥ सुप्रभेदागमः

மூலாகமங்கள் 28 ம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களை உடையவை. இவையனைத்தும் தெளிவான சூத்திரமாக உள்ளவை. போகமோக்ஷங்களுக்கு மூலகாரணமானவை என்று விநாயகருக்கு சிவபெருமான கூறியதால் இதன் சிறப்புப் பயனை அறியலாம்.

ஆலய பூஜையின் அவசியம்

शिवस्याराधनं नित्यं भुक्तिमुक्तिप्रदायकम्।
अन्येषां पूजनं नित्यं ग्रामवृद्धिकरं भवेत्॥
देवस्थानं विना यत्र एककालं न वासयेत्।
नित्यपूजा विहीने तु कृत्तपीठां करोति हि॥ सुप्रभेदागमः

க்ராமங்களில் அமையும் கோயில்களில் நித்ய பூஜை அவசியமாகும். சிவனுக்கு பூஜை செய்வது மக்களுக்கு போகம் மோக்ஷம் என்ற இருபயனையும் தரும். மற்ற தெய்வங்களுக்கு நித்ய பூஜை செய்வதால் க்ராம மேம்பாடும், வளர்ச்சியும் ஏற்படும். ஆலயம் இல்லாத ஊரில் உருபோதும் வசிக்கக் கூடாது. ஆலயங்களில் நித்ய பூஜை செய்யாவிடில் ராக்ஷஸர்கள் கோபித்து தொல்லையளிப்பார்கள் என்கிறது ஆகமம். ஆதலால் ஊரில் ஆலய பூஜை அவசியம்.

வழிபாட்டின் பயன்கள்

पूजया विपुलं राज्यमग्निकार्येण संपदम्।
जपेन पापसंशुद्धिं ज्ञानं ध्यानेन चाश्नुते॥ शैवागमे

உலகில் சைவாகம வழியில் பூஜை செய்வதால் அரசபதவியும், ஹோமம் செய்வதால் செல்வத்தையும், ஜபத்தினால் பாவத்திலிருந்து விடுதலையும், தியானத்தினால் ஞானத்தையும் பெற்று பக்தன் தான் விரும்பும் அனைத்தையும் அடைகிறான் என்கின்றன சிவாகமங்கள்.

ஆசார்யனே தெய்வம்

आचार्यस्य मनस्तुष्टिः देवसन्तोषकारणम्।
आचार्य कोपाद्देवोऽपि कुप्यते नात्र संशयः॥
पूजा मुख्यं गुरोः पादः मन्त्रमुख्यं गुरोर्वचः।
ध्यानमुख्यं गुरोर्मूर्त्तिः मोक्षमुख्यं गुरोः कृपा॥ कारणागमगः

ஒருவருக்கு மந்திரத்தை உபதேசம் செய்தவரே ஆசார்யர் எனப்படுவர். அவருக்கும் அவர் வழிபடும் தெய்வத்திக்கும் வேறுபாடு இல்லை. ஆகையால் அந்த ஆசார்யரை கோபிக்க செய்வதால் தேவனும் கோபம் அடைவார் என்பது ஐயமில்லை.

சமயநெறியில் முதலில் பூஜைக்கு மிகவும் முக்கியம் குருவின் பாதபூஜை ஆகும். மந்த்ரத்திற்கு மிக முக்கியமானது குரு கூறிய வார்த்தைகள், தியானம் செய்வதற்கு மிகவும் முக்கியமானது குருவின் திருவுருவம், மோக்ஷத்திற்கு மிகவும் முக்கியம் குருவின் கருணை, என்பதை யாவரும் அறிந்து தத்தமது குருவைப் போற்றி பணிந்து வழிப்பட்டு, அந்த குருவருளாலேயே இறைவனின் திருவருளை யாவரும் பெற இயலும் என்பது திண்ணம்.

சிவ ஆசானைக் கருதும் முறை

आचार्यः शिव एव स्यात् अनयोरन्तरं नहि।
यः पश्येत् अनयोर्भेदं सोऽधोगतिम् अवाप्नुयात्॥ सूक्तिमञ्जरि

சிவனைப் பூஜிக்கும் ஆசார்யர் சிவனே ஆகிறார். ஆசார்யருக்கும் சிவனுக்கும் வேறுபாடு என்பது இல்லை. எவனொருவன் சிவனுக்கும் தனது ஆசார்யனுக்கும் வேறுபாட்டைக் காண்பானோ, அவன் இழிவான கீழ்நிலையை அடைவான், என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

கோபுரதரிசன பயன்

दूरतः शिखरं दृष्ट्वा नमस्कुर्यात्तु यो नरः।
मुच्यते सर्वपापेभ्यो निर्मोकादिव पन्नगाः॥ - सुप्रभेदागमः

எவனொருவன் தொலைவிருந்தபடியே கோயில் விமானம் அல்லது கோபுர சிகரத்தைக் கண்டு வணங்குகின்றானோ, அவன் அப்பொழுதே எல்லா பாவங்களிலிருந்தும் அக்கணமே கருடசிந்தனையால் பாம்பின் விஷம் அகலுவதைப் போல் விலகுவதால் விடுதலையடைகிறான்.

புருஷன் என்ற சொல்பொருள்

अव्यक्तं मन इत्याहुः शरीरं परमुच्यते।
अव्यक्ताख्ये पुरे चेते पुरुषस्तेन चोच्यते॥ - कालोत्तरोगमः

வெளியில் தெரியாததான அவ்யக்தமாக உள்ளதே மனம் எனப்படுகிறது.. உடல் என்பதே புரம் என்று கூறப்படுகிறது. இவ்வாறு அவ்யக்தம் என்கிற மனத்துடன் உடலான புரத்தில் உறைன்துள்ள காரணத்தால் ஆன்மா, ஜீவன் எனப்படுகிற உயிரானது புருஷன் என கூறப்படுகிறது.

மனிதன் முக்திபெறும் வழி

निराश्रयं सदाचित्तं सर्वालम्बनवर्जितम्।
मनोऽवस्थाविनिर्मुक्तं विज्ञेयं मुक्तिलक्षणम्॥
विषये लोलुपं चित्तं मर्कटादपि चञ्चलम्।
सर्वशून्यपदे स्थित्वा ततो निर्वाणमेष्यति॥- देवीकालोत्तरोगमः

ஜீவனானது எப்பொழுதும் பற்றற்றதாக எதையுமே தொடர்புகொள்ளாமலிருப்பதும், எப்போதும் மனநிலைகளிலிருந்து விடுபட்டதாகவும் இருப்பதே முக்திக்கு இலக்கணம். விருப்பப்பொருளில் எப்பவும் அலையும் மனதானது அசையும் குரங்கினும் கொடியது. அதை நிறுத்தி விலக்குவதே முக்தி என்று கூறப்படுகிறது.

ஈரத்துணியுடன் செயல்படாமை

आर्द्रवस्त्रेण संयुक्तः कर्म कुर्याद् अतन्द्रितम्।
वृथा भवति तत् कर्म पुनः स्नानेन शुद्ध्यति॥ सूक्तिमञ्जरी

ஈரமான ஆடையுடன் கூடியவராக செய்யப்படும் எச்செயலும் சாஸ்த்ரவிரோதமாய் செய்யப்பட்டதாகும். அவை வீணானதாகும். ஆதலால் மீண்டும் நீராடுவதால் சுத்தமடையும். எனவே ஈரத்துணியுடன் சுபசெயல்களைச் செய்யக்கூடாது என்று அறிக.

பஸ்மமும் அதன் தேவையும்

भासयत्यखिलं ज्ञाबनं नित्यं भासयते च यत्।
भक्षणात् सर्वपापानां भस्मेति परिगीयते॥
भस्मस्नानविहीनस्तु शिवपूजां न कारयेत्। सूक्तिमञ्जरि

எல்லா ஞானத்தையும் வெளிப்படுத்துவதாலும் எப்பொழுதும் ஒளிவீசுவதாலும், எல்லா பாவங்கலையும் உட்கொண்டு புனிதப்படுவதாலும், பஸ்மம் என்ற பெயர் விபூதியான திருநீறுக்கு விளங்குகிறது. இதனை முறை அணிதலாகிய பஸ்மஸ்நாநத்தை செய்யாமல் நெற்றியில் மேனியில் திருநீறு அணியாமல் சிவபூஜையை ஒருபோதும் செய்யக்கூடாது.

திருநீறு அணியும் பயன்

सर्वतीर्थेषु यत् स्नानं सर्वयज्ञेषु यत् फलम्।
तत् फलं कोटिगुणितं भस्मस्नानेन सिद्ध्यति॥– सुप्रभेदागमः

எல்லா புண்யதீர்த்தங்களில் செய்த ஸ்நானப்பயனும், எல்லா யாகத்திலும் எந்த பயன் கிடைக்குமோ அப்பயனும், கோடிமடங்கு கூடுதலாக முறையான பஸ்மத்தை முறைப்படி அணிந்து கொள்வதாலேயே கைகூடும். அந்த அளவு உயரிய பயன்களைத்தரவல்லது என்றறிக.

பவித்ரம் சொல்லின் பொருள்

पकारं पापनाशं स्यात् विकारस्य मलक्षयम्।
त्रकारं कर्मशुद्ध्यर्थं पवित्रस्य तु लक्षणम्॥ - वीरतन्त्रम्

பவித்ரம் என்ற சொல்லில் உள்ள பகார எழுத்தானது ஏற்படும் பாவங்களை அழிப்பதனையும், வி என்ற எழுத்தானது மும்மலங்களை ஆன்மாவில் உள்ள மாசுகளை அழிப்பதனையும், த்ர என்ற எழுத்தானது செய்யும் செயலைத் தூய்மைப்படுத்துதலையும் செய்கின்றன. இம்மூன்று பயன்கள் ஏற்படும் பொருட்டு செய்யப்படும் செயலே சந்தனம் புஷ்பம் அருகு அக்ஷதை அர்க்யஜலம் இவை ஐந்தை சேர்த்து பூஜைமுடிவில் அளிக்கப்படும் நித்யபவித்ரம் சாத்துவதன் பயனாகும்.

பதிஞானத்தால் மட்டுமே முக்தி

पाशज्ञानान्न मुक्तिः स्यात् पशुज्ञानात् तथैव च।
सर्वतश्च यतो मुक्तिः पतिज्ञानेन गम्यते॥

இறைவனோடு இணைந்து பேரானந்தப்பெருவாழ்வான முக்தியானது பாசஞானத்தினால் ஏற்படாது. அவ்வாறே பசுஞானத்தினால் ஏற்படாது. எல்லாவகையிலும் இறைவனை உணரும் பதிஞானத்தினால் மட்டுமே பரமுக்தி (பாசவிடுதலை) கிட்டும்.

பவித்ரமாலையை சாத்தும் நோக்கம் (பவித்ரம்சொல்பொருள்)

मनसा कर्मणा वाचा यन्न्यूनं कर्मणामपि।
पतनात् त्रायते यस्मात् पवित्रकमिहोच्यते॥ - सूक्ष्मागमः

மனதாலும் செயலாலும் மொழிவதாலும் கர்மாக்களில் எந்தகுறையானது ஏற்பட்டு அத்தோஷத்தால் வீழ்ச்சி ஏற்படும். இந்த வீழ்ச்சியிலிருந்து அடியவர்களைக் காப்பது என்பதால் இது பவித்ரம் என்று பெயரில் கூறப்படுகிறது.

முடிவுரை:

சைவாகமங்கள் உலகெலாம் வாழும் உயிர்களை காக்கவும், புருஷார்த்தமெனும் அறம், பொருள், இன்பம் வீடுபேறு என்னும் பயன்களை உயிர்கள் பெறவும், பரமசிவன் சிவாகமங்களை உபதேசித்துள்ளார். அரிதானதும் உயர்வானதுமாக உள்ள சைவாகமங்களில் பல ஒப்பற்ற பொன்மொழிகள் ஒவ்வொரு காலகட்டகளிலும் பயன் அளிக்கின்றன.